# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்கள்
## (திருத்தம்)

***1946 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார் அவர்களால்*
*2022, யூலை மாதம் 06 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2022, யூன் மாதம் 02 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[***126 ஆம் சட்டமூலம்***]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்)

### 1946 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

***1.*** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவை திருத்தம் செய்தல்

***2.*** 1946 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 28 (8) (ஆ) உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு சேர்க்கப்பட்டு முதன்மைச் சட்டவாக்கத்தின் 28(9) ஆக பயனுடையதாதல் வேண்டும் :-

"28(9) (1) நியமனப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கும்போது உள்ளூராட்சி அதிகாரசபைக்கு பெயர்குறித்து நியமிக்கப்படும் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கையில் நான்கில் ஒரு பகுதியினருக்குக் குறையாமல் இளைஞர் வேட்பாளர்களாக இருப்பதை ஒவ்வோர் அரசியற் கட்சியும் அல்லது சுயேட்சைக் குழுவும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(2) தேர்தல்கள் ஆணையாளர் வர்த்தமானியில் வெளியிடும் அறிவித்தல் மூலம் ஒவ்வோர் உள்ளூராட்சி அதிகாரசபைகள் தொடர்பாகவும் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டிய இளைஞர் வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) இந்த வாசகத்தின் நோக்கத்துக்காக ஒரு இளைஞர் என்பவர் தேர்தல்கள் ஆணையாளரினால் தேர்தல்கள் கோரப்படும் தினத்தில் 35 அல்லது

அதற்குக் குறைவான வயதான ஒரு தனிப்பட்ட ஆண் அல்லது பெண் என வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(4) வாசகம் 28(9)(1) இல் விதந்துரைக்கப்பட்ட தேவையான நிபந்தனைகளை ஒரு அரசியட் கட்சி அல்லது சுயேச்சைக் குழு நிறைவேற்றுவதற்கு தவறும் சந்தர்ப்பத்தில், அத்தகைய நியமினப் பத்திரம் வெற்றும் வரிதுமானதாகக் கருதப்பட்டு தெரிவத்தாட்சி அலுவலரால் வேட்புமனு நிராகரிக்கப்படுதல் வேண்டும்.”.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.